## R 5498 (page 212)

# நான் எப்படி, எங்கு ஊழியம் செய்வது?

# HOW AND WHERE SHALL I SERVE?

"சகோதரரே, அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்" - 1கொரிந்தியர் 7:24.

இந்த திறவுகோல் வசனத்தில், திருமணம் மற்றும் அதன் பொறுப்புக்கள் குறித்து அப்போஸ்தலர் விவாதிக்கிறார். மேலும் அடிமைகளையும் அவர்களது நிலையைக் குறித்தும் விவாதிக்கின்றார். அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால், பின்பு விடுதலையடையும்படி தேடாதே என்கிறார். ஆயினும் அடிமையானவனுக்கு சுயாதீனம் கிடைக்குமானால், ஒரு சுயாதீனனைப் போல் பரந்த ஊழிய வாய்ப்பை தனக்குப் பயன்படுத்துவதில் மகிழ்ச்சியடைய வேண்டும் என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார். ஆனால் அந்த அடிமை தன் எஜமானனிடம்;"நான் தேவனுடைய பிள்ளையாகிவிட்டேன், அதனால் உங்களுடைய விதிமுறைகள் எனக்கு ஒன்றுமில்லை, ஒரு அடிமையாக இனியும் உம்மால் என்னை வைத்துக் கொள்ள முடியாது" என்று கூறக்கூடாது.

கர்த்தருடைய ஜனங்கள் அவர்கள் அழைக்கப்பட்ட நிலைமையிலிருந்து உடனடியான மாற்றத்தை எதிர்பார்க்கக்கூடாது என்று அப்போஸ்தலர் கருத்து தெரிவிக்கிறார். நீங்கள் தற்போது செய்து வருகிறவைகளிலிருந்து விலக எண்ண வேண்டிய அவசியமில்லை என்பதே அவருடைய கருத்தாயுள்ளது. அடிமைக்குரியதாகவோ அல்லது ஊழியனுக்குரியதாகவோ உங்களுடைய தொழில் இருக்கலாம். உங்கள் மனம் இளைப்பாறுகிறது என்ற உணர்வில் அதில் நிலைத்திருக்க வேண்டும். கர்த்தர் கதவைத் திறந்திருப்பாரானால், அப்போது அதைக்குறித்து நீங்கள் கவனிக்க வேண்டும். உங்களது நிலைமை மிகத் தீவிரமான ஒன்றாக இருக்குமானால், கர்த்தருடைய ஏற்றவேளையில், அவருக்குப் பிரியமாயிருந்தால் அவர் அதை குறைப்பார் என்ற உணர்வில் அவரிடம் கேட்பது சரியாக இருக்கும். ஒவ்வொரு சோதனையிலிருந்தும் தப்பிக்கும் போக்கை ஏற்படுத்துவதாகவோ அல்லது அவ்விஷயத்தில் வழிகாட்டுவதாகவோ அவர் நமக்கு வாக்களித்திருக்கிறார். இதனால் அதை நம்மால் தாங்க முடியும் (1கொரி.10:13). இது நம் தொழில் சார்ந்த தொடர்புகளிலும் எல்லாவற்றிலும் பொருந்தும்

ஒருவர் தனியாயிருப்பாரானால், கூடுதலான பொறுப்புக்களை எடுக்கும் காரியத்தைக் குறித்து மிக கவனமாக யோசிக்க வேண்டும். "நான் தனியாயிருக்கும் போது அழைக்கப்பட்டேன், இப்போது நான் திருமணம் செய்து கொள்ள கர்த்தர் விரும்புகிறாரா? என்ற அவர் யோசிக்க வேண்டும். கர்த்தர் அவ்வாறு விரும்புகிறார் என்று அவர் தீர்மானத்துக்கு வருவாரானால் "கர்த்தருக்குள்ளாக இருப்பவர்களுக்கு மட்டுமே உள்ள திருமணம் பற்றிய அப்போஸ்தலருடைய அறிவுரையை அவர் நினைவில் கொள்ள வேண்டும். அழைக்கப்பட்டபோதே அவர் திருமணம் செய்தவராயிருந்தாரானால், "நான் திருமணம் செய்யாதிருந்தால் நலமாயிருந்திருக்கும், திருமணம் செய்யாதிருந்தால் என்னால் அதிகமாயும் சிறப்பாயும் செய்ய முடிந்திருக்கும்" என்று அவர் கூறக்கூடாது. அழைக்கப்பட்டபோதே அவர் திருமணம் செய்திருப்பாரானால், **[R5498 : page 213]** அவரது நேரத்தின் மீது அடமானம் வைக்கப்பட்டுள்ளது. அவர் இந்த அடமானத்தை அல்லது ஒப்பந்தத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

## திறந்த வாசல்களில் உட்பிரவேசியுங்கள், ஆனால் அவர்களை வற்புறுத்தவேண்டாம்

ஆயினும் அப்போஸ்தலர் இதே அதிகாரத்தின் முந்தைய வசனங்களில், அவிசுவாசியாயுள்ள கணவன் அல்லது மனைவி பிரிந்து போக வேண்டுமானால், அவ்வாறே அவர்கள் செய்யட்டும் என்று குறிப்பிடுகிறார். அவர்கள் பிரிந்து செல்ல விரும்புவார்களானால் அவர்கள் செய்வதை எதிர்க்க முயல வேண்டாம். கர்த்தர் உங்களுக்குத் தேவையானவைகளை வழங்க வல்லவராயிருக்கிறார் அதை ஏற்றுக்கொள். நமது தொழிலை நாம் விட்டுவிட எண்ணியிருந்து, வேதாகம புஸ்தகங்களை விநியோகிக்கும் பணிக்கு செல்லவோ, அல்லது யாத்திரை பயணம் செய்யும் வேலைக்கோ, அல்லது வேத பாடவகுப்பை விரிவாக்கம் செய்யும் பணியிலோ அல்லது எதுவாயிருந்தாலும், நாம் யோசிக்க வேண்டிய முறையான காரியம் என்னவெனில், இவ்வழி கர்த்தரால் திறக்கப்பட்டிருக்கிறதா? என்பதையே ஆகும். இவ்வழியில் நமக்கு ஊழியத்துக்கான சிறந்த வாய்ப்பு வருவதை நாம் கண்டடைவோமானால், அறுவடை வயலில் பணி செய்வதற்கு ஒரு பரந்த வாய்ப்பு திறந்த வாசலாக இருக்கிறதெனில், அப்பொழுது நாம் சந்தோஷமடைந்து, அந்த வாசலில் உட்பிரவேசிக்க வேண்டும்.

ஆனால் திறந்த வாசலை அங்கே கண்டடையவில்லையெனில், நாம் வலுக்கட்டாயமாக திறக்க நேரிடுமானால், அவ்வாறான பணியில் நுழைவதற்கு சில சரியான கொள்கையை மீற நேரிட்டால், அது உண்மை நிலையை மாற்றும். நாம் கொள்கைக்காக நிற்கவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபடுவதற்கான எந்த சரியான கொள்கையையும் நாம் ஒருபோதும் எதிர்க்கக்கூடாது. ஊழியம் செய்ய எப்போதும் சில வழி இருக்கும். இங்கு அப்போஸ்தலர், சகோதரர்களுக்கு முகவரியிட்டு எழுதுகிறார், அவருடைய வார்த்தைகள் அப்போது கனவீனத்துக்குரிய, பகுதி நேரத் தொழில் செய்து வந்த எவரையும் குறிப்பிடவில்லை.

## எந்த சகோதரனும் இழிவான தொழிலில் இல்லை

ஒரு மனிதன் சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு, ஒரு சூதாட்ட வீட்டின் காவலராக இருந்தார் அல்லது வேறு சில இழிவான தொழிலில் ஈடுபட்டிருந்தார் என்று வைத்துக்கொள்வோம். மதுபானக்கடையிலும் வேலை செய்திருக்கலாம், (அநேக சகோதரர்கள் இந்த தொழிலிலிருந்து வந்திருக்கிறார்கள்). சத்தியத்தை அவர் ஏற்றுக்கொண்டபிறகு, அவர் கூறலாம்; “நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்? மனிதர்களுக்கு தீங்கிழைப்பதை நான் விநியோகிக்கிறேனா? நான் இதை விட்டுவிட வேண்டும்”. இவ்விதமாக அவர் தேவனுடைய பிள்ளை ஆகுவதற்கு முன்பாக, மதுபான தொழிலிலிருந்து வெளியேற வேண்டும். அவர் தேவனுடைய பிள்ளையாக ஆவதற்கு முன்பாக, கொள்கையற்ற மனநிலையிலிருந்து வெளியேறியிருக்க வேண்டும். “சகோதரரே, அவனவன் தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்” என்ற அப்போஸ்தலருடைய வார்த்தைகள் சகோதரர்களுக்கு கொடுக்கப்பட்டன. தன் மனசாட்சி வெறுக்கின்ற தொழிலைச் செய்து, தன் உடன் சிருஷ்டிப்புகளுக்கு தீங்கு ஏற்படுத்துபவன், கிறிஸ்துவுக்குள்ளான சகோதரனாக இருக்க முடியாது.

அப்போஸ்தலர்களின் நாளில், இந்த முழு விஷயமும் ஊழியக்காரர்களுக்கு நிச்சயமாகவே வலிமையானது. தாழ்மையான வகுப்புக்கள், ஊழியர் வகுப்புக்கள், அடிமை வகுப்புக்களில், அந்நேரத்திலும் ஒவ்வொரு வேளையிலும், செய்தியைப் பெற்றுக்

கொள்ளத் தயாராயிருந்தது தெரியவருகிறது. நம் கர்த்தர் ஐஸ்வரியவான்கள் வகுப்பாருக்கு கூறினார்; "ஐஸ்வரியவான்களே உங்களுக்கு ஐயோ!"; தரித்திரரைப் பார்த்துக் கூறினார்; "வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே, எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்". ஒளியினிடத்திற்கு வந்தவர்களில் ஞானிகள் அநேகரில்லை, ஐஸ்வரியவான்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை என்று நாம் காண்கிறோம்.

## தண்டனையளிக்கும் நிறுவனங்களில் சகோதரர்கள்

தண்டனையளிக்கும் நிறுவனத்திலுள்ள ஒரு கைதி, இவ்வாறு தனக்குள்ளாக சொல்லிக்கொள்வது நல்லது: "நன்று, தேவனுடைய ஏற்பாட்டின் கீழ், இந்த செய்தியானது இங்கு சிறைச்சாலையில் என்னை வந்தடைந்தது, ஒருவேளை நான் இங்கு இல்லாதிருந்தால், இதை ஒரு போதும் அடைந்திருக்க முடியாது". அப்படிப்பட்ட நபராக நாம் ஒரு வேளை இருந்திருப்போமானால், விடுதலைபெறவேண்டி விண்ணப்பம் அனுப்புவதன் மூலம் கதவுகளைத் திறக்க வழிவகைகளைத்தேடி அவசரப்படுவதற்கு முயற்சிக்காமல், அப்படி விண்ணப்பிக்கத் துவங்குமுன், நன்கு ஆலோசிக்க வேண்டும். "ஒருவேளை, கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கு இந்த உடன் கைதிகளிடையே எனக்கு வாய்ப்பு கிடைக்கலாம், அவர்களுக்கு பிரசங்கிக்கும் வாய்ப்பை ஒருவேளை நான் அடையக்கூடும்" என்று நாம் நினைப்போமாக! அல்லது, விடுதலை செய்வதற்கான விண்ணப்பம் அளிக்கப்படுமானால், மேலும் அந்த விண்ணப்பம் மறுக்கப்படுமானால், அவ்விஷயத்தில் கர்த்தருடைய வார்த்தையாக அதை எண்ணிக்கொண்டு, அந்த மறுப்புக்கு நாம் தலை வணங்க வேண்டும். நாம் முழு நிறைவோடும் முழு மகிழ்ச்சியோடும், "இருளிலிருந்து அவருடைய அற்புதமான ஒளியினிடத்திறகு வரவழைத்தவருடைய புகழை எடுத்துரைக்க, நான் பெருமுயற்சி செய்வேன்" என்று நாம் கூறவேண்டும். அந்த மனிதன் அங்கேயாவது, வேறு ஏதாவது ஓரிடத்திலாவது ஊழியம் செய்ய நல்ல வாய்ப்பைப் பெறுவார், அதை நம்மால் அறியமுடியாது. கர்த்தர் தம் உண்மையுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் எது சிறந்ததோ அதைத் தருவார்.

-------------------------